**செய்தி வெளியீடு எண்: 579** **நாள்: 04.10.2012**

## செய்தி வெளியீடு

சட்டம் ஒழுங்கை பராமரித்தல், குற்றங்களை தடுத்தல் மற்றும் கண்டு பிடித்தல் ஆகிய பணிகளை திறம்பட மேற்கொண்டு, நாட்டின் பொது அமைதியைப் பேணிப் பாதுகாக்கும் மகத்தான துறையாக காவல்துறை விளங்குகிறது. இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்கும் வகையில் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்து வருகிறார்கள். அனைத்து புறக்காவல் நிலையங்களையும் படிப்படியாக முழு அளவிலான காவல் நிலையங்களாக தரம் உயர்த்தும் வண்ணம், இந்த நிதியாண்டு, அதாவது 2012-13 ஆம் ஆண்டில் சென்னையில் எச்.7 புறநகர் மருத்துவமனை; திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஜம்புநாதபுரம்; திருவாரூர் மாவட்டத்தில் தேவங்குடி; ஈரோடு மாவட்டத்தில் அரசு தலைமை மருத்துவமனை; வேலூர் மாவட்டத்தில் திம்மம்பேட்டை; சிவகங்கை மாவட்டத்தில் வேலாயுதப்பட்டினம்; திருநெல்வேலி மாவட்டத்தில் சீதபரப்பநல்லூர் மற்றும் அய்யாபுரம்; தூத்துக்குடி மாவட்டத்தில் சேரகுளம், சென்னை ரயில்வே மாவட்டத்தில் பேசின் பிரிட்ஜ் மற்றும் திருச்சிராப்பள்ளி ரயில்வே மாவட்டத்தில் மானாமதுரை மற்றும் தென்காசி ஆகிய 12 இடங்களிலுள்ள புறக்காவல் நிலையங்களை முழு அளவிலான காவல் நிலையங்களாக தரம் உயர்த்துவதோடு, இதற்கென 355 காவல் பணியிடங்களை கூடுதலாக தோற்றுவிக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதனால் அரசுக்கு 12 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவினம் ஏற்படும்.

போக்குவரத்து தொடர்பான காவல் பணிகளை மேலும் செம்மையாக மேற்கொள்ளும் வகையில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மணப்பாறை, திருப்பூர் மாவட்டத்தில் தாராபுரம், வேலூர் மாவட்டத்தில் திருப்பத்தூர், மதுரை மாவட்டத்தில் அவனியாபுரம் மற்றும் சென்னை மாநகரத்தில் குரோம்பேட்டை ஆகிய 5 இடங்களில் புதியதாக போக்குவரத்து காவல் நிலையங்களை உருவாக்கவும், இதற்கென 80 காவல் பணியிடங்களை புதியதாக தோற்றுவிக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதனால் அரசுக்கு 2 கோடியே 97 லட்சம் ரூபாய் செலவினம் ஏற்படும்.

திருப்பூர் நகரம் மாநகராட்சியாகவும், திருப்பூரை தலைநகராக கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்பட்ட பின்னர், அதற்குத் தேவையான காவல்துறை அலுவலகங்கள் உருவாக்கப்படவில்லை என்பதைக் கருத்தில் கொண்டும், திருப்பூரில் பெருகி வரும் மக்கள் தொகையையும், போக்குவரத்து நெரிசலையும் கருத்தில் கொண்டு, ஒரு காவல் ஆணையாளர் அலுவலகம் தோற்றுவிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்பதை கருத்தில் கொண்டு, திருப்பூர் நகரத்திற்கென 17 கோடியே 49 லட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய காவல்துறை ஆணையரகத்தை தோற்றுவிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதில் திருப்பூர் நகரில் ஏற்கெனவே உள்ள காவல் நிலையங்களுடன் புதிதாக போக்குவரத்து மற்றும்

அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்படும். இதற்கென 536 புதிய பணியிடங்களை உருவாக்கவும், 472 பணியிடங்களை திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கட்டுப்பாட்டிலிருந்து மறுபரவல் முறையில் நிரப்பவும் ஆக மொத்தம் 1,008 பணியிடங்களை அனுமதித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம், காவல்துறையின் பணிகள் சிறப்படைய வழிவகை ஏற்படும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள்தொடர்புத்துறை, சென்னை-9.

நாள்:- 4.10.2012.